Australian Government

COVID-19 VACCINATION

# COVID-19 தடுப்பூசிகளைப் பற்றி சிறு பிள்ளைகளிடம் எப்படிப் பேசுவது

கடைசிப் புதுப்பிப்பு: 8 ஆகஸ்ட்டு 2022

தீவிரமான COVID-19 ஏற்படுவதற்கான ஆபத்து இருக்கும் நோயெதிர்ப்புத் திறன் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ள, அல்லது இயலாமையுள்ள, அத்துடன் சிக்கலான மற்றும்/அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உடல்-நலப் பிரச்சினைகள் உள்ள 6 மாதங்களில் இருந்து 4 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ள சில குழந்தைகளுக்கும் தடுப்பூசியேற்றம் சிபாரிசு செய்யப்படுகிறது. புது விடயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள உங்களுடைய குழந்தை ஆர்வமாக இருப்பதும் COVID-19 தடுப்பூசி இடலைப் பற்றிய ஏராளமான கேள்விகள் அதனிடம் இருப்பதும் இயற்கையானதே. COVID-19 தடுப்பூசி இட்டுக்கொள்வதைப் பற்றி சில குழந்தைகள் கவலைப்படக்கூடும். குழந்தைகள் தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கு முன்பும், இட்டுக்கொண்ட பிறகும் அவர்களுடன் பேசுவதற்கு உபயோககரமாக இருக்கக் கூடிய சில யோசனைக் குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன.

**'சுகாதாரம் மற்றும் முதியோர் பராமரிப்புத் திணைக்கள வலைத்தல'**த்தில் கிடைக்கும் COVID-19 தடுப்பூசிகளைப் பற்றிய மிகச் சமீபத்தியத் தகவல்களை, நீங்கள் உடனுக்குடன் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

COVID-19 தடுப்பூசியேற்றத்தைப் பற்றி உங்களுக்கு இருக்கும் கரிசனங்கள் அல்லது கேள்விகள் எதைப் பற்றியும் உங்களுடைய தடுப்பூசியேற்ற சேவை வழங்குநர் அல்லது மருத்துவருடன் உங்கள் குழந்தை தடுப்பூசியைப் பெறுவதற்கு முன்பாக நீங்கள் கலந்து பேசவும் செய்யலாம்.

அவர்கள் சொல்லும் பதில்களை செவிமடுத்துக் கேட்கவேண்டியதும், தடுப்பூசி இட்டுக்கொள்வதைப் பற்றி அவர்களுக்கு இருக்கும் அச்சங்கள் எதையும் நீங்கள் சரிதான் என்று ஏற்றுக்கொள்ளவேண்டியதும் முக்கியம்.

- COVID-19 தடுப்பூசியைப் பற்றி இதுவரை நீங்கள் என்ன தெரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை எனக்குச் சொல்லுங்கள்.
- இதற்கு முன்பு தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொண்டுள்ளீர்களா?

உங்களுடைய குழந்தை இதற்கு முன்பு தடுப்பூசி இட்டுக்கொண்டிருப்ப என்பதற்கும் அது அவ்வளவு மோசமாக இருந்திருக்காது என்பதற்குமானன சாத்தியம் உள்ளது.

COVID-19-ஐப் பற்றி உங்களுக்குத் தெரிந்த விடயங்களை உண்மையாகவும், குழந்தையின் வயதிற்கு ஏற்ற விதத்திலும் விளக்கிச் சொல்லுங்கள்.

உங்களுடைய பிள்ளை உணர்வுரீதியான சமிக்ஞைகளை வயதுவந்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறது என்பதை நினைவில்கொள்ளுங்கள், ஆகவே அச்சங்களைப் பற்றி உங்களுடைய பிள்ளையிடம் அதிகம் பேசுவது ஆக்கபூர்வமாக இல்லாமலும், உங்களுடைய பிள்ளைக்கு அசௌகரிய உணர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்கக்கூடும்.

மருத்துவர் அல்லது சுகாதாரத் தொழிலர் உங்களுடைய குழந்தையிடம் சில கேள்விகள் கேட்பார் என்பதையும், உங்கள் குழந்தையின் புஜத்தில் (அல்லது குழந்தை 6 மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரைக்குமான வயதுள்ளவராக இருந்தால் அவருடைய காலில்) ஊசி உன்று இடப்படும் என்றும், அவர்களுக்கு ஊசி குத்தும் உணர்வு சிறிது இருக்கும் என்றும், அதற்குப் பிறகு ஊசி இறங்கிய இடத்தில் சிறிது வலி இருக்கக்கூடும் என்றும் விளக்கிச் சொல்லுங்கள். உங்களுடைய குழந்தையின் புஜத்தில் ஊசி உள்ளிறங்கிய இடத்தில் சிறிது வலி ஏற்படுவது பொதுவானதே என்றும், மருந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதன் அடையாளமே அது என்று சொல்வதன் மூலம் உங்கள் குழந்தைக்கு மறு-நம்பிக்கையூட்டுங்கள்.

தடுப்பூசி இடப்படுவதைப் பற்றி உங்களுடைய குழந்தை பதற்றமாக இருந்தால், அவருடைய உணர்வுகள் என்ன என்று மேலும் தெரிந்துகொள்ளப் பாருங்கள், அல்லது தேவைப்பட்டால், உங்களுடைய மருத்துவரிடமிருந்து மேலதிக அறிவுரை நாடுங்கள்.

## உங்களுடைய குழந்தையின் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்

உங்கள் குழந்தையிடம் இருக்கக் கூடிய கேள்விகள் எதற்கும் சிறு பிள்ளைகளுக்கு விளங்கும் வகையிலான பதில்களைத் தயாராக வைத்திருங்கள். இந்த உரையாடலில் உதவக்கூடிய சில முக்கியமான கேள்விகளும், பதில்களும் இங்கே தரப்பட்டுள்ளன:

இப்படிச் செய்வது உதவியாக இருக்கும் என்று நீங்கள் நினைத்தால், குழந்தையின் பாட்டன்-பாட்டியார் அல்லது சகோதரங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது, பாடசாலைக்கு மீண்டும் திரும்பிச் செல்வது, விளையாட்டு அணிகளில் சேர்ந்து விளையாடுவது போன்ற காரியங்களைச் செய்ய இயலுமாக இருப்பது போன்ற யதார்த்தமான உதாரணங்களைப் பயன்படுத்துங்கள்.

ஆஸ்திரேலியாவில், அனைத்து மருந்துகளும் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவை ஒரு முகமையினால் முற்றிலுமாக சோதிக்கப்பட்டுள்ளன. அவை பாதுகாப்பானவை அல்ல என்றால், அவற்றை சனங்களுக்குக் கொடுக்கமாட்டார்கள்.

உங்களுடைய குழந்தை ஊசியைக் கண்டு அச்சப்படும் என்றால், உங்களுடைய பிள்ளையை ஆயத்தம் செய்வதற்கும், கவனத்தைத் திசை திருப்புவதறகுமான செயலூக்கம் மிக்க வழிகள் முக்கியம்.

5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு சிறியதொரு சிகிச்சையகம், அல்லது உள்ளூர் மருந்துக்கடை அல்லது பொது-மருத்துவர் சிகிச்சையகம் போன்ற பழக்கப்பட்ட ஒரு இடத்திற்குச் செல்வது உதவியாக இருக்கலாம். பெரிய அளவில் தடுப்பூசியேற்றங்கள் செய்யப்படும் இடங்கள் சப்தம் மிக்கதாகவும், ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ளதாகவும் இருக்கலாம், மற்றும் இதன் காரணமாக உங்களுடைய பிள்ளைக்கு ஏற்படும் இன்னல் அதிகரிக்கலாம்.

நல்ல விதமான அனுபவத்தையும், கவனத் திருப்பலையும் ஏற்படுத்துவதற்காக, உங்களுடைய பிள்ளைக்குப் பிடித்தமான பொம்மைகள் அல்லது புத்தகங்களைக் கொண்டுவாருங்கள்.

உங்களுடைய குழந்தை ஊசிக்குப் பயப்படுபவர் என்றால், போதுமான நேரம் ஒதுக்கவும், அவசரமில்லாமலும், குழந்தையை வலுக்கட்டாயப்படுத்தாமலும் இந்த செயல்முறை நடந்தேற உதவவும் உங்களுடைய சேவை வழங்குநருக்கு இதை முன்கூட்டியே தெரிவியுங்கள்.

இந்தத் தடுப்பூசியைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு www.health.gov.au எனும் **சுகாதாரம் மற்றும் முதியோர் பராமரிப்புத் துறை இணையதளம்-** இற்கு நீங்கள் செல்லலாம்.

National Coronavirus Helpline (‘தேசிய கொரோனாவைரஸ் உதவியிணைப்பு) மற்றும் COVID-19 Vaccine Helpline (COVID-19 தடுப்பூசி உதவி இணைப்பு)-ஐ **1800 020 080** எனும் இலக்கத்தில் நீங்கள் அழைக்கலாம், மற்றும் இலவச மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு ‘தெரிவு 8’-ஐ மேற்கொள்ளலாம்.

நீங்கள் செவித்-திறன் அற்றவர் என்றால், அல்லது செவித்-திறன் அல்லது பேச்சுத்-திறன் குறைபாடு உள்ளவர் என்றால், **133 677** எனும் இலக்கத்தில் National Relay ('நேஷனல் ரிலே’) சேவையை அழையுங்கள்.